# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC.No.2036/2025 |
| Deposition of witness for Prosecution | : L.W.4/P.w.4 |
| Name | : ராஜ்குமார் |
| Father Name/Husband Name | : பாலகிருஷ்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 21.04.2026 நாளாகிய இன்று திரு. R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் கடலூர் பாதிரிகுப்பத்தில் வசித்து குடிசை தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 எனது பெரியம்மா மகன் ஆவார். வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்க வில்லை.

**<u>சாட்சியை அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி,</u>**

கடந்த 05.09.2021 ந் தேதி இரவு 22.15 மணியளவில் மஞ்சக்குப்பம் மைதானத்தில் எதிரிகள் அ.சா.1 -யிடம் தீப்பெட்டி கேட்டு கொடுக்காததால் அ.சா.1 யும் என்னையும் அசிங்கமாக திட்டி, எதிரி ரமேஷ்குமார் இரும்பு கம்பியால் அ.சா.1 வாயில் அடித்து சொற்பக்காயத்தை ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. தடுக்க வந்த என்னை எதிரி பிரசன்னா என்பவர் இரும்பு கம்பி காட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் ராம் குமார், அருண்குமார் அ.சா.1 யும் என்னையும் கையாலும் காலாலும் தாக்கி இரத்த காயம் ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் கூறி விட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.